இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 36 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 29 – செவ்வாய்க்கிழமை 15 செப்டம்பர் 2026 – திருச்சி ★ ★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 36 : Thiruvalluvar Year - 2057 - Aavani 29 - Tuesday 15 September 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


## இடைத் தேர்தல்: நிர்வாகத் திறனற்ற

# ‘டம்மி’ முதலமைச்சருக்கு சரியான பாடம் புகட்டுவோம்!

## வேளச்சேரி பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் திருமணத்தை நடத்தி வைத்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, செப். 15 -**

**“நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்கள் மூலம் ‘டம்மி’ முதலமைச்சருக்கு சரியான பாடத்தைப் புகட்டுவோம்” என்று கழக இளைஞர் அணி செயலாளரும் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேளச்சேரி பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் திருமணத்தை நடத்தி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் - எலிசபெத் மிஷேல் ஆகியோரின் திருமணத்தை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.



மணவிழாவை நடத்தி வைத்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துரை வருமாறு :-

இன்று சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் தினேஷ், சகோதரி எலிசபெத் மிஷேல் ஆகியோரின் திருமணத்தை, உங்கள் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இது நம்முடைய வீட்டுத் திருமணம் என்ற அந்த உரிமையுடன் நாம் அத்தனை பேரும் இந்தத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி இருக்கின்றோம்.

### சிறப்பான பணி

இதில் எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், கூடுதல் பெருமை என்னவென்றால், மணமகன் தினேஷ் அவர்கள் எங்களுடைய இளைஞர் அணியைச் சேர்ந்த சகோதரர் ஆவார். இளைஞர் அணியில் நிர்வாகி மட்டுமல்ல, மிகச்சிறப்பாகத் தன்னுடைய பணிகளைச் செய்து வருபவர்தான் தம்பி தினேஷ் அவர்கள். அதுமட்டுமல்ல, இந்தத் திருமணத்தில் பல விசேஷங்கள் இருக்கின்றன, சிறப்புகள் இருக்கின்றன.

கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், இது ஒரு காதல் திருமணம். அதற்கு முதலில் மணமக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சாதாரண காதல் திருமணம் மட்டுமல்ல, மதம் கடந்து நடக்கும் ஒரு கலப்புத் திருமணம். அதோடு மட்டும் நிற்கவில்லை, இது மாநிலம் கடந்து நடக்கக்கூடிய ஒரு திருமணம்.

### பெற்றோர் சம்மதம்

முதலில் திருமணம் என்பதே ஒரு கடினமான விஷயம். அதில் காதல் திருமணம் என்பது கூடுதல் கடினம். முதலில் பெண், பையனிடம் காதலைச் சொல்ல வேண்டும். பையன் பெண்ணிடம் காதலைச் சொல்ல வேண்டும். கவர வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய சம்மதத்தைப் பெற வேண்டும். அதன் பிறகு அவர்களுடைய பெற்றோர்களுடைய சம்மதத்தைப் பெற வேண்டும்.

இவையெல்லாம் முடிந்ததற்கு பிறகு அந்தப் பெண்ணின் சித்தப்பா, மாமா இவர்கள் எல்லாம் கிளம்பி வருவார்கள், சண்டைக்கு வருவார்கள். `அது எப்படி எங்களைக் கேட்காமல் இந்தத் திருமணத்தை நீங்கள் நிச்சயம் செய்தீர்கள்' என்று கேட்பார்கள். அவர்களைச் சம்மதிக்க வைக்க வேண்டும். இப்படிப் பல கடினமான விஷயங்கள் திருமணங்களில், அதுவும் குறிப்பாகக் காதல் திருமணங்களில் இருக்கின்றன. அதுவும் மாநிலம் கடந்து நடத்தும் ஒரு திருமணம்.

அதுமட்டுமல்ல, மதம் கடந்து நடக்கும் இந்தக்காதல் திருமணத்தைப் பார்க்கும் போது, அவ்வளவு எளிதாக இது நடந்திருக்காது, அவ்வளவு எளிதாக இந்த அனுமதி கிடைத்திருக்காது உங்களுக்கு. அதனால் தான் நம்முடைய வீட்டில் இந்தத் திருமணத்தைப் பாதுகாப்பாக இன்று அவர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள். ஆனால் எத்தனை தடைகளையும் தாண்டி இன்றைக்கு இந்தத் திருமணம் மிகச்சிறப்பாக நடந்திருக்கின்றது. தம்பி தினேஷ் அவர்களுக்கும் எலிசபெத் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நல்ல நண்பர்களாக வாழ வேண்டும்

இன்று இந்தத் திருமண பந்தத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார்கள். எப்படித் திருமணத்திற்கு முன்பு இருவரும் ஒரு சிறந்த நண்பர்களாக இருந்தார்களோ, அதேபோலத் திருமணத்திற்குப் பின்பும் மணமக்கள் இருவரும் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும் என்று நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நாம் ஒரு மிக மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் இரண்டு நாளில் முப்பெரும் விழாவைக் கொண்டாட இருக்கின்றது. 76வது ஆண்டை நிறைவு செய்து, 77வது ஆண்டில் அடியெடுத்து வைக்கப் போகிறது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த 77 ஆண்டுகளில் நம்முடைய இயக்கம் எத்தனையோ வெற்றிகளையும் பார்த்திருக்கின்றது, எத்தனையோ தோல்விகளையும் பார்த்திருக்கிறோம். தேர்தல் வெற்றி, தோல்விகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, என்றுமே மக்களோடு நிற்கின்ற இயக்கம், கடந்த 77 ஆண்டுகளாக மக்களோடு நிற்கின்ற இயக்கம்தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## இலண்டனில் நண்பா, நண்பிகளுடன் முதல்வர் விஜய் கொண்டாட்டம்!

# தமிழ்நாட்டில் மக்களோ மின்வெட்டினால் திண்டாட்டம்!

## வீதிகளில் தீப்பந்தம் ஏந்தி போராடும் அவலம்!

சென்னை, செப். 15 -

தமிழகத்தில் மின்தேவை 21 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரித்துள்ள நிலையில், மின் உற்பத்தியில் சுமார் 5 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் முதல் சிறுநகரங்கள், பேரூராட்சிகள் மற்றும் கிராமங்கள் வரை பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இரவு நேரங்களில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்படுவதால் பொதுமக்கள் தூக்கத்தை இழந்து வருகின்றனர். 15 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை மின்வெட்டு ஏற்படுவதாகவும், சில பகுதிகளில் நீண்ட நேரம் மின்சாரம் இல்லாமல் அவதிப்படுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

தமிழகத்தில் வழக்கமாக கோடை காலங்களில் மட்டுமே மின்தேவை 20 ஆயிரம் மெகாவாட்டை கடக்கும். ஆனால் தற்போது செப்டம்பர் மாதத்திலேயே மின்நுகர்வு 21 ஆயிரம் மெகாவாட்டை தொட்டுள்ளதாக மின்வாரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் கடும் வெயில் நிலவுவதால் வீடுகளில் ஏசி, மின்விசிறி உள்ளிட்ட மின்சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் பகல் நேரத்திலும், குறிப்பாக இரவு நேரத்திலும் மின்தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மின்தேவை அதிகரிக்கும் காலங்கள் ஒவ்வொரு ஆண்டும் முன்கூட்டியே கணிக்கக்கூடியதாக இருக்கும் நிலையில், அதற்கேற்ப மின் உற்பத்தி மற்றும் மின்சார கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மின்வாரியத்தின் முக்கிய பொறுப்பாகும்.



தற்போது மின்தேவைக்கும் கிடைக்கும் மின்சாரத்துக்கும் இடையே சுமார் 5 ஆயிரம் மெகாவாட் பற்றாக்குறை இருப்பதாக கூறப்படும் நிலையில், உண்மையான மின் பற்றாக்குறை எவ்வளவு என்பதை தமிழக அரசு வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. மின்வெட்டு பிரச்சினை ஒரு சில மாவட்டங்களுக்கு மட்டுமே என்ற நிலையை தாண்டி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் மின்வெட்டு குறித்து புகார் தெரிவித்து வருகின்றனர்.

சிறுநகரங்கள், கிராமப்புறங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு நேரத்தில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்படுவதால் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் மற்றும் நோயாளிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பகலில் வெயிலில் உழைத்து விட்டு வீடு திரும்பும் தொழிலாளர்கள் இரவு நேரத்தில் ஓய்வெடுக்க முடியாமல் தவிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. மின்வெட்டு ஏற்பட்டதும் பொதுமக்கள் மின்வாரிய புகார் சேவையை தொடர்பு கொள்கின்றனர். புகார் பதிவு செய்யப்பட்டதாகவும், விரைவில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் பதில் அளிக்கப்படுகிறது. ஆனால், எப்போது மின்சாரம் வரும் என்பது குறித்து உறுதியான தகவல் கிடைப்பதில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். சில பகுதிகளில் மீண்டும் மீண்டும் புகார் அளித்த பிறகே மின்சாரம் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதனால், புகார்களை பதிவு செய்வதற்கான வசதி மட்டும் போதுமா? புகார் அளித்தவுடன் எவ்வளவு நேரத்தில் தீர்வு காணப்படுகிறது? என்ற கேள்வி எழுந்துள்ளது.